







We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 2019

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 13.01.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்











## தமிழக நிகழ்வுகள்

- உலக வங்கி நிதி உதவியுடன், தமிழகத்தில் நீர், நில மேலாண்மை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த **அமெரிக்க கர்னெல் பல்கலைக்கழகத்துடன் தமிழக அரசானது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்** கையெழுத்திட்டுள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- வறுமையை ஒழித்து **அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கும் அடிப்படை வருமானம்** அளிப்பதற்காக, **சிக்கிம்** மாநிலமானது "உலக அடிப்படை வருமானம்" (**Universal Basic Income**) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளது.
    - இத்திட்டமானது 2022ம் ஆண்டிற்குள் முழுமையாக செயல்பாட்டிற்கு வரும் என அறிவிக்கப்பட்டது.

- மனிதனை விண்ணிற்கு செலுத்தும் இஸ்ரோவின் "**ககன்யான் திட்ட**" செயல்பாட்டின் ஒரு பகுதியாக, **மனித விண்வெளி விமான மையம்** (Human Space Flight Centre) **பெங்களூரில் இஸ்ரோ அமைத்துள்ளது**.
    - தலைவர் - உன்னிகிருஷ்ணன் நாயர் (Unnikrishnan Nair)
    - 2021ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு பெண் உட்பட 3 விண்வெளி வீரர்களை விண்வெளிக்கு அனுப்ப இஸ்ரோ திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **இந்திய தொழில்நுட்ப நிறுவனம்** - சென்னையைச் (IIT – சென்னை) சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், **நீர் மூலக்கூறுகளின் உதவியுடன் கார்பன் டை ஆக்ஸைடுகளை படிக வடிவத்தில் அமைத்து விண்வெளி எரிபொருளை** உருவாக்கியுள்ளனர்.
    - இதன் மூலம், எதிர்காலத்தில் பசுமை இல்ல வாயுக்களை கட்டுப்படுத்த உதவும்.

## விருதுகள்

- **நேபாள இராணுவத்தின் தலைமை தளபதி "பூர்ண சந்திரா தாபா"**

WeShine Academy TM

(Purna Chandra Thaba) – விற்கு இந்திய இராணுவத்தின் சார்பில், **இந்திய ராணுவ ஜெனரல் விருது** வழங்கப்பட்டுள்ளது.

## நியமனங்கள்

- **தேசிய மனித உரிமைகள்** ஆணையத்தின் **பொதுச் செயலாளராக "ஜெயதீப் கோவிந்த்"** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் - H.L. தத்து
    - தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு – 1993 அக்டோபர் 12
    - தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் - மீனாகுமாரி
    - தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையம் கொண்டுவரப்பட்ட நாள் - ஏப்ரல் 17, 1997

- **மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்** (UPSC) **உறுப்பினராக** முன்னாள் தலைமை புள்ளியியலாளர் **டி.சி.ஏ. ஆனந்த் (T.C.A. Anant)** நியமிக்கப்பட்டுள்ளார்.
    - UPSC-யில் தலைவர் உள்பட 10 உறுப்பினர்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது.
    - UPSC-ன் தற்போதைய தலைவர் - அரவிந்த் சக்சேனா (Aravind Saxena)

## முக்கிய தினங்கள்

- **தேசிய இளைஞர்கள் தினம் - 12 ஜனவரி**
    - விவேகானந்தரின் பிறந்தநாளின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12ம் நாள் தேசிய இளைஞர் தினமாக இந்தியாவில் கொண்டாடப்படுகிறது.
    - இத்தினமானது 1984ம் ஆண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது.
    - சர்வதேச இளைஞர் தினமானது ஆகஸ்ட் 12ம் நாள் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.